4 – ஆம் பக்கத் தொடர்ச்சி

### கொடுமுடி வடக்கு ஒன்றியம்

மு.சின்னசாமி ஒன்றிய செயலாளர் 63799 87275 | ச.சதீஸ்குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 95858 11193

| வ.எண் | தேதி | பாக எண்கள் (62 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 4 | 01.8.2024 முதல் 06.8.2024 வரை | 170, 171, 172, 173, 174, 175, 176, 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191, 192, 193, 194, 195, 196, 197, 198, 245, 246, 247, 248, 249, 250, 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 259, 260, 261, 262, 263, 264, 265, 266, 267, 268, 269, 270, 271, 272, 273, 274, 275, 276, 277 | 6 | எம்.ராஜா கமல்ஹாசன் கொடுமுடி பேரூர் செயலாளர் 99444 30565 எஸ்.ராமமூர்த்தி பாசூர் பேரூர் செயலாளர் 97154 45577 பி.சண்முகம் வெள்ளோட்டாம்பரப்பு பேரூர் செயலாளர் 99522 56527 பி.விஸ்வநாதன் கிளாம்பாடி பேரூர் செயலாளர் 97895 03504 யு.கே.சுப்புரத்தினம் ஊஞ்சலூர் பேரூர் செயலாளர் 99949 66947 ப.உலகநாதன் சென்னசமுத்திரம் பேரூர் செயலாளர் 94437 89135 என்.செந்தில்குமார் வெங்கம்பூர் பேரூர் செயலாளர் 99423 80008 |

### மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம்

வா.கதிர்வேல் ஒன்றிய செயலாளர் 94428 39078 | எஸ்.எஸ்.விஜயராஜன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 88831 56777 | ரா.நித்தின் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98650 13555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (60 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 5 | 9.8.2024 முதல் 12.8.2024 வரை | 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 80, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89, 95, 96, 97, 98, 125, 126, 127, 128, 129, 130, 131, 132, 133 | 6 | பி.வி.சரவணன் மொடக்குறிச்சி பேரூர் செயலாளர் 99654 44666 |

### மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம்

சு.குணசேகரன் ஒன்றிய செயலாளர் 94432 31221 | எஸ்.எஸ்.விஜயராஜன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 88831 56777 | ரா.நித்தின் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98650 13555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (69 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 6 | 13.8.2024 முதல் 16.8.2024 வரை | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122, 123, 124 | 7 | அ.சண்முகம் அவல்பூந்துறை பேரூர் செயலாளர் 90955 28888 |

### மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம்

ஆர்.விஜயகுமார் ஒன்றிய செயலாளர் 98427 80835 | எஸ்.எஸ்.விஜயராஜன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 88831 56777 | ரா.நித்தின் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98650 13555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (40 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 7 | 17.8.2024 முதல் 20.8.2024 வரை | 90, 91, 92, 93, 94, 134, 135, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 148, 149, 150, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 164, 165, 166, 167, 168 | 4 | பி.கோவிந்தன் அரச்சலூர் பேரூர் செயலாளர் 99656 95252 த.விஸ்வநாதன் வடுகபட்டி பேரூர் செயலாளர் 98427 67336 |

### பெருந்துறை தெற்கு ஒன்றியம்

கே.பி.சாமி ஒன்றிய செயலாளர் 98942 42059 | எஸ்.எம்.பாலசுப்பிரமணியம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98944 61999

| வ.எண் | தேதி | பாக எண்கள் (61 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 8 | 21.8.2024 முதல் 24.8.2024 வரை | 130, 131, 132, 133, 134, 135, 136, 137, 142, 143, 144, 145, 146, 147, 151, 152, 153, 154, 155, 156, 157, 158, 159, 160, 161, 162, 163, 164, 165, 166, 167, 168, 169, 170, 171, 172, 173, 174, 175, 176, 177, 178, 179, 180, 181, 182, 183, 184, 185, 186, 187, 188, 189, 190, 191, 192, 198, 199, 200, 201, 202, | 6 | ஓ.சி.வி.ராஜேந்திரன் பெருந்துறை பேரூர் செயலாளர் 94424 88888 பி.எஸ்.திருமூர்த்தி கருமாண்டிசெல்லிபாளையம் பேரூர் செயலாளர் 99423 30333 |

### பெருந்துறை கிழக்கு ஒன்றியம்

சி.பெரியசாமி ஒன்றிய செயலாளர் 96266 33511 | எஸ்.எம்.பாலசுப்பிரமணியம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98944 61999

| வ.எண் | தேதி | பாக எண்கள் (44 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 9 | 25.8.2024 முதல் 28.8.2024 வரை | 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 49, 50, 51, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 64, 65, 66, 67, 68, 69, 70 | 4 | சு.தங்கமுத்து பள்ளபாளையம் பேரூர் செயலாளர் 98650 11544 கே.பி.தங்கமுத்து பெத்தாம்பாளையம் பேரூர் செயலாளர் 90954 39616 கே.வி.பி.செந்தில்முருகன் காஞ்சிக்கோயில் பேரூர் செயலாளர் 94867 77555 எம்.குருசாமி நல்லாம்பட்டி பேரூர் செயலாளர் 94427 26624 |

### பெருந்துறை வடக்கு ஒன்றியம்

ப.சின்னசாமி ஒன்றிய செயலாளர் 94422 44527 | எஸ்.எம்.பாலசுப்பிரமணியம் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 98944 61999

| வ.எண் | தேதி | பாக எண்கள் (42 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| 10 | 29.8.2024 முதல் 02.9.2024 வரை | 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 80, 81, 82, 83, 84, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 79, 123, 124, 125, 126, 127, 138, 139, 140, 141, 148, 149, 150 | 4 | – |

### ஊத்துக்குளி மத்திய ஒன்றியம்

வி.ராஜா ஒன்றிய செயலாளர் 99422 42405 | தெ.ராகவேந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 96263 55555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (29 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| | 03.9.2024முதல் 06.9.2024வரை | 99, 100, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 111, 112, 113, 114, 115, 116, 117, 128, 129, 203, 204, 205, 206, 207, 208, 209, 217 | 3 | – |

### ஊத்துக்குளி வடக்கு ஒன்றியம்

செ.சுப்பிரமணியம் ஒன்றிய செயலாளர் 99426 87646 | தெ.ராகவேந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 96263 55555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (29 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| | 7.9.2024 முதல் 10.9.2024 வரை | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 85, 86, 87, 88, 89, 118, 119, 120, 121, 122, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98 | 3 | சி.சென்னியப்பன் குன்னத்தூர் பேரூர் செயலாளர் 99425 54685 |

### ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம்

பி.பி.ஈஸ்வரமூர்த்தி ஒன்றிய செயலாளர் 94430 16356 | தெ.ராகவேந்திரன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் 96263 55555

| வ.எண் | தேதி | பாக எண்கள் (44 பாகங்கள்) | இடம் | நிர்வாகிகள் |
|---|---|---|---|---|
| | 11.9.2024 முதல் 14.9.2024 வரை | 210, 211, 212, 213, 214, 215, 216, 217, 218, 219, 220, 230, 231, 232, 234, 235, 236, 237, 238, 239, 240, 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 259, 260, 261, 262, 263, 264, 221, 222, 223, 224, 225, 226, 227, 228, 229 | 4 | ஊத்துக்குளி பேரூர் |

**ஜெ.திருவாசகம்**

அமைப்பாளர், ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி



மக்களவைத் தேர்தல் 2024ன் போது முதலமைச்சர் அவர்கள், கோவையில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார்கள். இந்நிலையில், கோவையில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைப்பதற்கு ஏற்புடைய இடத்தை தேர்வு செய்வதற்கான முதற்கட்டப் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.06.2024) பார்வை யிட்டு கோவை ஒண்டிப்புதூரில் சர்வதேச கிரிக்கெட் ஸ்டேடியம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளனவா என நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்து, தொழில்துறையில் சிறந்து விளங்கும் கோவை மாநகரம், விளையாட்டுத் துறையிலும் உலகமே உற்று நோக்குகிற வகையில் மேலும் உயர்வதை உறுதி செய்வோம் எனக் குறிப்பிட்டார். உடன் அமைச்சர்கள் சு.முத்துசாமி, டி.ஆர்.பி. ராஜா மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கோவையைச் சேர்ந்த தடகள வீராங்கனை நௌஷீன் பானுசந்த், 71வது டென்சிங் ஹிலாரி மவுண்ட் எவரெஸ்ட் சர்வதேச மாரத்தான் போட்டியில் பங்கேற்று 42 கிலோமீட்டர் தூரத்தை 10 மணிநேரம் 30 நிமிடங்களில் கடந்து வெற்றி பெற்றுள்ளார். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலம் நிதியுதவி பெற்று இப்போட்டியில் பங்கேற்ற நௌஷீன் பானுசந்த், வெற்றிக்கான சான்றிதழ் மற்றும் கேடயத்தை கோவையில் நேற்று முன்தினம் (14.06.2024) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். தொடர்ந்து பல்வேறு வெற்றிகளை குவித்து, தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தருமாறு அவரை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்.

# டெல்டா குறுவை சாகுபடித் திட்டம் முறையாகச் சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூன் 16 -

டெல்டா மாவட்ட உழவர்களின் நலன் கருதி, டெல்டா குறுவை சாகுபடிச் சிறப்புத் திட்டம் அறிவிறித்துள்ளோம் எனவும், இத்திட்டத்தின் பயன் முறையாக உழவர் பெருமக்களுக்குச் சென்று சேர்வதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

டெல்டா குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டம் 2024 - ஐ யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:

**பருவமழை தாமதமாகி வருவதால் டெல்டா மாவட்ட உழவர்களின் நலன் பாதிப்படையக் கூடாதென டெல்டா குறுவை சாகுபடிச் சிறப்புத் திட்டத்தை அறிவித்துள்ளோம்.**

**இத்திட்டத்தின் பயன் முறையாகச் சென்று சேர்வதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை - நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி - பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில்

# துணை பதிவுத்துறைத் தலைவர்கள் - மாவட்டப் பதிவாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

## வணிகவரி - பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜூன் 16 -*

சென்னை, நந்தனம், ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அலுவலக வளாக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (14.6.2024) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள் (நிர்வாகம்) மற்றும் (தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர்(முத்திரை), தனித் துணை ஆட்சியர்(முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் பணித்திறன் மற்றும் மே 2024 மாதத்திற்கான இலக்கு மற்றும் வருவாய் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள் நிர்ணயிக்கப்பட்ட வருவாயினை அடையவும், அரசின் வருவாயை கூட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

சார்பதிவகங்களில் ஆவணப்பதிவுக்கு வரும் பொதுமக்களுக்கு ஆவணம் பதிவு முடித்து எந்த வித குறைபாடு இல்லாத ஆவணங்களை பதிவு நாளன்றே திரும்ப அளிக்க அறிவுறுத்தப்பட்டது.

சார்பதிவாளர்களால் பரிசீலனை மற்றும் இதர காரணங்களுக்காக நிலுவை வைக்கப்பட்ட ஆவணங்கள் சீராய்வு செய்யப்பட்டதில் நிலுவை எண்ணிக்கையினை கனிசமான அளவில் குறைத்திட அறிவுறுத்தப்பட்டது.

மேலும் சார்பதிவகங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளான வில்லங்கச் சான்று வழங்குதல், சான்றிட்ட நகல்கள் வழங்குதல் ஆகிய வற்றினை குறித்த காலத்திற்குள் பொதுமக்களை அலைகழிக்காமல் வழங்க அறிவுறுத்தப்பட்டது.

இது குறித்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள் மற்றும் நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் தொடர் கண்காணிப்பு மேற்கொண்டு இதில் சுணக்கம் ஏற்படாமல் சேவை வழங்குவதை உறுதி செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் வணிகவரித்துறை ஆணையர் முனைவர்.டி.ஜகந்நாதன், பதிவுத்துறைத் தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கடலூர் மேற்கு மாவட்டம்

# நான்கு சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ. கணேசன் தலைமையில்!

*கடலூர், ஜூன் 16 -*

'நடைபெற்று முடிந்த 18வது நாடாளுமன்றத் தேர்தலில் கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் 'இந்தியா' கூட்டணி காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட எம்.கே.விஷ்ணு பிரசாத். எம்.பி. அவர்களுக்கு "கை"சின்னத்தில் வாக்களித்த கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம் , நெய்வேலி, பண்ருட்டி, ஆகிய சட்டமன்ற தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல் நிகழ்ச்சி கீழ்க் காணும் விபரப்படி நடைபெறுகிறது.



17.06.2024 காலை 9.30 மணி ராமலிங்கம் அஞ்சுகம் திருமண மண்டபம் திட்டக்குடி.

17.06.2024 காலை 11 மணி சபிதா திருமண மண்டபம் விருத்தாசலம் .

17.06.2024 மதியம் 1 மணி சின்னதுரை திருமண மண்டபம் ஆர்ச் கேட் அருகில் நெய்வேலி.

அதுசமயம் இந்தியா கூட்டணி கட்சியில் பணியாற்றிய ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை பொதுக் குழு, செயற்குழு, உறுப்பினர்கள் , ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக , வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் , தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி மாவட்ட செயலாளர்கள் , ஒன்றிய, நகர, பேரூர் , கிளை, வார்டு செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் இந்தியா கூட்டணி கட்சிகளின் மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தமது அறிக்கையில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வெ. கணேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

உதயசூரியன் சின்னத்திற்கு வீதி, வீதியாக ஓட்டு கேட்ட சிறுவனுக்கு

# எம்.எல்.ஏ. சீட்டு கொடுத்த முதல்வர்!

## கண்ணீருடன் தி.மு.க வேட்பாளர் அன்னியூர் சிவா உருக்கம்!

*விழுப்புரம், ஜூன் 16 -*

வீதி, வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு ஓட்டுகேட்ட சிறுவனுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின், எம்.எல்.ஏ. சீட்டு கொடுத்துள்ளதாக விக்கிர வாண்டி இடைத் தேர்தல் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா கண்ணீர் மல்க உருக்கமாக பேசினார்.

விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் விக்கிர வாண்டி இடைத்தேர்தல் வேட்பாளர் அறிமுகக்கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் வேட்பாளர் தி.மு.க.வைச் சேர்ந்த அன்னியூர்சிவா பேசுகையில், கடந்த 1984ம் ஆண்டு முகையூர் சட்டமன்றத் தேர்தலின்போது போடுங்கம்மா ஓட்டு, உதயசூரியனை பார்த்து என்று வீதி, வீதியாக சென்று ஓட்டு கேட்ட அந்த சிறுவன்தான், இன்றைக்கு



வேட்பாளராக உங்கள் முன் நிற்கிறேன். வீதி, வீதியாக ஓட்டுகேட்ட என்னை யும் எம்.எல்.ஏ. வேட்பாளராக அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலி னுக்கும், பரிந்துரைத்த அமைச்சர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். என்னை வெற்றிபெற செய்யுமாறு உங்கள் பாதங்களை தொட்டு கேட்டுக் கொள்கிறேன் என்று கண்ணீர் மல்க உருக்கமாக பேசினார்.

இந்த தொகுதியில் ஏற்கனவே எம்.எல்.ஏ.வாக இருந்து உயிரிழந்த ராதாமணி, புகேழந்தி ஆற்றிய பணிகளை தொடர்ந்து மக்களுக்கு செய்வேன். என்றார். வேட்பாளர் அறிமுகக்கூட்டத்தில் கண்ணீர் மல்க அன்னியூர் சிவா வின் உருக்கமான பேச்சு சமூக வலைதளங்களிலும் வைரலானது.